Tamil

Information sheet 13 -
Workers and Volunteers
and the Reportable Conduct Scheme

# தகவல் தாள் 13

## தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மற்றும் புகாரளிக்கத்தக்க நடத்தைத் திட்டம்

### காரணம்

இந்தத் தகவல் தாளின் நோக்கம், நீங்கள் புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டொன்றுக்கு ஆளாகியிருந்தால், அதுபற்றி தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு (உங்களுக்கு) புகாரளிக்கத்தக்க நடத்தைத் திட்டம் (குறிப்பிட்ட திட்டம்) பற்றி வழிகாட்டுதலை வழங்குவதாகும்.

### புகாரளிக்கத்தக்க நடத்தைத் திட்டம் பற்றி

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அவர்களின் தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்களால் புறக்கணிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்த நிறுவனங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்த இந்தத் திட்டம் முயல்கிறது. இத்திட்டமானது *குழந்தை நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2005* ஆல் நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஆணைக்குழுவிற்கு (ஆணையகம்) அமைப்புகளின் தலைவர்கள் தங்கள் தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்களால் ஒரு குழந்தை சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட நடத்தைகள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து அறிவிக்கப்படல் வேண்டும்.

தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பற்றி, அவர்கள் பின்வருமாறு இருந்தாலும்கூட, குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட வேண்டும்:

- அவர்கள் தங்கள் வேலையின் ஒரு பகுதியாக குழந்தைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கவில்லை
- குறிப்பிட்ட நடத்தையானது வேலையில் ஈடுபடும் போதோ அதற்கு பின்னரோ ஏற்பட்டது.

அமைப்புகளின் தலைவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும்.

### எந்த வகையான தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளனர்?

பின்வருவது உட்பட திட்டம் உள்ளடக்கிய ஓர் அமைப்பால் பணியமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரின் நடத்தைக்கும் இந்த திட்டம் பொருந்தும்:

- ஒரு தன்னார்வலராக, ஒப்பந்தக்காரராக, அலுவலக உரிமையாளராக, அதிகாரியாக அல்லது பிற பதவிகளை உள்ளடக்கிய சேவைகளை வழங்குவதற்கான திட்டத்தின்கீழ் ஒரு நிறுவனத்தால் நேரடியாக இணையப் பெற்றவர்கள்.


(03) 8601 5281
contact@ccyp.vic.gov.au
ccyp.vic.gov.au
இறுதி புதுப்பிப்பு: ஜூன் மாதம் 20 ஆம் திகதி, 2018
COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

- வளர்ப்பாளர்கள் அல்லது காப்பாளர்கள்
- மத விவகார அமைச்சர்கள், மதத் தலைவர்கள் அல்லது ஒரு மத அமைப்பின் அதிகாரிகள்.

மேற்கூறிய இந்த நபர்களை விவரிக்க ஆணையகம் 'தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது.

நீங்கள் பணிபுரியும் அல்லது தன்னார்வத் தொண்டு செய்யும் நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் இருந்தால், உங்கள் நடத்தையானது திட்டத்தின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களை ஆணையகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் இல் காணலாம்.

## புகாரளிக்கத்தக்க நடத்தை என்றால் என்ன?

புகாரளிக்கத்தக்க ஐந்து வகை நடத்தைகள் உள்ளன:

1. பாலியல் குற்றங்கள்
2. பாலியல் சார்ந்த துர்நடத்தை
3. உடல் ரீதியான வன்முறை
4. ஒரு குழந்தைக்கு உணர்ச்சி அல்லது உளவியல் தீங்கு விளைவிக்கும் குறிப்பிட்டுக்கூறும் நடத்தை
5. ஒரு குழந்தையின் குறிப்பிடத்தக்க புறக்கணிப்பு.

பாலியல் ரீதியான குற்றங்கள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் உடல் ரீதியான வன்முறைகளை ஒரு குழந்தைக்கு எதிராக அல்லது குழந்தையின் முன்னிலையில் அவர்கள் செய்தால் இத்திட்டத்தின்கீழ் இடம்பெறுவார்கள்.

⚠ ஒரு குழந்தை என்பது 18 வயதிற்குட்பட்ட நபர்.

⚠ புகாரளிக்கத்தக்க நடத்தைக்குள் குற்றவியல் செயற்பாடுகளை விட அதிகமாக உள்ளது.

## ஆணையகத்தின் பங்கு என்ன?

ஆணையகத்தின் பங்கு:

- ஒரு நியாயமான மற்றும் பொருத்தமான பதிலை ஊக்குவிக்க ஆதரவு வழங்கி அதேபோல் வழிகாட்டி புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வு வழங்கும் ஒரு நிறுவனத்தை வழங்குதல்
- புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுகளுக்கு நிறுவனங்களின் பதில்களை சுயாதீனமாக மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் மற்றும் பொருத்தமான போது பதில்களை மேம்படுத்த பரிந்துரைகளை வழங்கவும் செய்தல்
- சில சூழ்நிலைகளில், விசாரணை முடிவை நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாளருக்கு அறிவுறுத்துங்கள். குழந்தைகளுடன் பணிபுரிதல் என்ற நோக்கங்களுக்காக புகாரளிக்கத்தக்க நடத்தைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், *குழந்தைகளுடன் பணிபுரிதல் சட்டம் 2005* இன்கீழ் இது மறுபரிசீலனை செய்யப்படும்.

- சில சந்தர்ப்பங்களின் கீழ், புகாரளிக்கத்தக்க நடத்தை இடம்பெறும் பட்சத்தில் ஏனைய தொடர்புடைய தகவல்களை

(விக்டோரியாவின் அரசாங்கத் திணைக்கங்ககள் மற்றும் அவுஸ்திரேலிய சுகாதார பயிற்சியாளர் ஒழுங்குமுறை நிறுவனம் போன்றவை) கட்டுப்பாட்டாளர்களுக்கு வழங்கவும்.

- ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால், புகாரளிக்கத்தக்க நடத்தை விசாரணைகளின் முடிவுகள் பதிவுசெய்யப்பட்ட ஆசிரியரைப் பற்றியதென்றால் விக்டோரியன் கற்பித்தல் பயற்சி நிறுவனத்தை (VIT) அறிவித்தல் வேண்டும்.

## புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு என்ன?

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு என்பது ஒரு நியாயமான நம்பிக்கையை உருவாக்க எந்தவொரு நபருக்கும் வழிவகுத்த தகவலை வெளியிட்டதால் ஒரு தொழிலாளி அல்லது தன்னார்வலர் செய்த ஒரு குற்றச்சாட்டு:

- புகாரளிக்கத்தக்க நடத்தை, அல்லது
- புகாரளிக்கத்தக்க நடத்தை சம்பந்தப்பட்ட தவறான நடத்தை.

ஒரு நியாயமான நம்பிக்கை என்பது சந்தேகத்தை விட பெரியது. நம்பிக்கைக்கு சில குறிக்கோள் அடிப்படைகள் இருக்க வேண்டும். இதற்கு ஆதாரம் தேவையில்லை. ஆனால் வதந்திகள் அல்லது ஊகிப்புகளை விட மேலாக இருக்க வேண்டும்.

⚠ புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டை அவர்கள் நம்பாவிட்டாலும் கூட ஆணையகத்திற்கு அறிவிக்க குறிப்பிட்ட அமைப்பின் தலைவர் இருத்தல் வேண்டும்.

## புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு வழங்கப்பட்டால் என்ன நடக்கும்?

ஒரு அமைப்பின் தலைவர் தனது தொழிலாளர்களில் அல்லது தன்னார்வலர்களில் ஒருவர் மீது புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டை அறிந்தால், அவர் கண்டிப்பாக:

1. சில சந்தர்ப்பங்களில் ஆணையகத்தையும் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பையும் (மேலும் விக்டோரியா காவல்துறை அவர்கள் குற்றவியல் நடத்தையுடையவர்கள் என சந்தேகித்தால்) அறிவிக்க வேண்டும்
2. குற்றச்சாட்டு விசாரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் (தேவைப்பட்டால் விக்டோரியா காவல்துறையின் அனுமதியைப் பெற்ற பிறகு)
3. அந்த விசாரணையின் முடிவில் பெற்ற கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்
4. கண்டுபிடிப்புகளை ஆணையகத்திற்கு வழங்க வேண்டும்.

## புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு செயல்முறை

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டின் விசாரணையில் இந்தப் படிமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும்:

- குற்றச்சாட்டைப் பெற்று மதிப்பீடு செய்தல்
- ஒரு விசாரணையை நிறுவி தொடர்தல்
- ஆதாரங்களை மதிப்பிடுதல்

- விசாரணையை இறுதி செய்து ஓர் அறிக்கையைத் தயாரித்தல்
- கண்டுபிடிப்புகளைச் சேகரித்தல்
- கண்டுபிடிப்புகளுக்கு பதிலளிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுத்தல்.

### விசாரணைகளைத் தொடர்தல்

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டை பின்வருபவர்களால் விசாரிக்கப்படலாம்:

- நிறுவனத்தின் உள்ளக ஊழியர் (உதாரணமாக, மனிதவளப்பிரிவு உறுப்பினர்)
- ஒரு வெளியக சுயாதீனப் புலனாய்வாளர்
- சீரமைப்பாளர்
- ஆணையகம்.

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு குறித்த விசாரணையில் பொதுவாக அடங்குபவை:

- தொடர்பான போதிய பௌதிக ஆதாரங்களின் தொகுப்பு
- தொடர்புடைய சாட்சிகளுடன் நேர்காணல்கள், அதில் குழந்தைகளும் இருக்கலாம்
- குற்றச்சாட்டுக்கு உட்பட்டவருடன் ஒரு நேர்காணல்.

## நீங்கள் ஒரு குற்றச்சாட்டுக்கு உட்பட்டவரா?

நீங்கள் ஒரு புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுக்கு உட்பட்டால் பின்வரும் பிரிவுகள் வழிகாட்டும்.

### நடைமுறையிலுள்ள நியாயம்

திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று என்னவென்றால், நீங்கள் புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுக்கு உட்பட்டவராக இருந்தால், உங்கள் நடத்தை தொடர்பான விசாரணைகளின் போது வழமையிலுள்ள நீதியைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. வழமையிலுள்ள நீதி பெரும்பாலும் நடைமுறையிலுள்ள நியாயம் என்று அழைக்கப்படுகிறது.

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுச் செயல்முறை *நியாயமாகவும்* அதேவேளை *முறையாகவும்* தேவையற்ற தாமதங்கள் இன்றியும் நடத்தப்படுவது முக்கியமாகும்.

உங்களைப் பற்றி புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக உங்களுக்கு நேரடியாக அறிவிக்கப்படல் வேண்டும் என்று நடைமுறையிலுள்ள நியாயத்தில் குறிப்பிடப்படவில்லை.

அந்த விசாரணையின் நேர்மையாகவும் சம்பந்தப்பட்ட அனைவரின் நல்வாழ்வை உறுதிசெய்யும் வகையிலும், அதேவேளை உங்களுக்குத் தெரிவிக்க மிகவும் பொருத்தமான மற்றும் ஆரம்பகட்ட முறைகளை புலனாய்வாளர் பரிசீலிக்க வேண்டும்.

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு குறித்து உங்களுக்கு அறிவிப்பு வழங்குவதில் நியாயமற்ற தாமதம் இருக்கக்கூடாது.

குறிப்பிட்ட கணிசமான சந்தர்ப்பங்களில், எடுத்துக்காட்டாக ஒரு குற்றச்சாட்டு வெளிப்படையாக தவறானது மற்றும் உங்கள் ஈடுபாடு இல்லாமல் உங்களுக்கு ஆதரவாக தீர்மானங்கள் எடுக்கப்படும்போது, அந்தக் குற்றச்சாட்டு பற்றி உங்களிடம் கூறப்படாமல் இருக்கலாம்.

குற்றச்சாட்டுக் கடிதம் மூலம் உங்களுக்கு குற்றச்சாட்டு பற்றி

அறிவிக்கப்படலாம். குற்றச்சாட்டுக் கடிதம் என்பது உங்களுக்கு எதிரான புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுகளின் விபரங்களை தெளிவாகக் கூறும் எழுதப்பட்ட ஆவணமாகும்.

குற்றச்சாட்டுக் கடிதம் வழங்கப்பட்டால், நீங்கள் தெளிவாகப் பதிலளிக்க முடியும் வகையில் அந்தக் கடிதத்தில் ஒவ்வொரு குற்றச்சாட்டு குறித்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் குற்றச்சாட்டு(கள்) என்ன என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள போதுமான தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

குற்றச்சாட்டுக் கடிதத்தில் பின்வருவன அடங்கும்:

- சாடப்படும் நடத்தை என்னவென்று
- சாடப்படும் நடத்தை எங்கே எப்போது இடம்பெற்றது என்று
- சாடப்படும் நடத்தையுடன் தொடர்புபட்டோர் யார் என்று

**எனக்கு எதிராக புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டால் என்ன நடக்கும்?**

நீங்கள் ஒரு குற்றச்சாட்டு கடிதத்தைப் பெற்றீர்கள் என்றாலோ வேறு ஏதேனும் ஒரு புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு குறித்து உங்களுக்கு அறிவிக்கப்பட்டாலோ, உங்களுக்கு நேர்வது:

- குற்றச்சாட்டின் விவரங்கள் பற்றி கூறப்படுதல்
- குற்றச்சாட்டைப் பரிசீலிக்க தகுந்த நேரம் ஒதுக்குதல். இதன்மூலம் குற்றச்சாட்டின் ஒரு பகுதியாக நேர்காணல் செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் ஊகிக்கும் நபர்களை பரிந்துரைத்தல் உட்பட
- நீங்கள் விசாரிக்கப்பட்டிருந்தால் பொருத்தமான ஆதரவாளர் ஒருவரின் வரவு இடம்பெற்றுள்ளதாயென வினவுதல்
- புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டு மற்றும் நம்பகமான, பொருத்தமான மற்றும் குறிப்பிடத்தக்க ஏதேனும் பாதகமான தகவல்களுக்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ பதிலளிக்க அழைக்கப்படல்
- பக்கச்சார்பற்ற ஒரு புலனாய்வாளர் இருத்தல்.

விசாரணையின் ஒரு பகுதியாக ஒரு வழக்கறிஞர், தொழிற்சங்கம் அல்லது பிற பிரதிநிதி அமைப்பிலிருந்து ஆலோசனை மற்றும்/அல்லது பிரதிநிதித்துவத்தைப் பெற உங்களுக்கு உரிமைகள் இருக்கலாம்.

⚠ உங்கள் தரப்பு வாதத்தை எழுத்துருவில் வழங்குதல் மற்றும்/அல்லது ஒரு நேர்காணலில் கலந்துகொள்ளுதல் என்பன குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க உங்களுக்கு உதவுகிறது. உங்கள் பதிப்பை முன்வைப்பதற்கு முன் ஆலோசனை பெற நீங்கள் உத்தேசிக்கலாம். ஏனெனில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சில கடுமையான பின்விளைவுகள் ஏற்படக்கூடும்.

**பணி நீக்கம், இடைநீக்கம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள்**

சில நிறுவனங்கள், விசாரிக்கும்போது உங்களை பணிநீக்கம் செய்ய வேண்டுமா அல்லது உங்களை இடைநீக்கம்

செய்ய வேண்டுமா என்று பரிசீலிக்கலாம். இந்த முடிவை எடுக்கும்போது, குழந்தைகள் மற்றும் அவர்களின் நிறுவனத்தில் உள்ள பிறருக்கு ஏற்படும் ஆபத்துகள் போன்ற பல்வேறு சிக்கல்களை உங்கள் நிறுவனத்தின் தலைவர் பரிசீலிக்கிறார்.

நிறுவனங்கள் இவற்றையும் செய்யலாம்:

- குழந்தைகளுடன் தொடர்பு கொள்வதைத் தடுத்தல்
- உங்களை ஏனைய கடமைகளுக்கு மாற்றுதல்
- பணியில் உங்களுக்கு கூடுதல் ஆதரவும் மேற்பார்வையும் இருப்பதை உறுதிசெய்தல்
- மற்ற தொழிலாளர்கள் அல்லது தன்னார்வலர்களுடன் இந்த விடயங்களைப் பற்றி விவாதிப்பதை தவிர்க்கும்படி அறிவுறுத்தல்
- உபகரணங்களை ஒப்படைக்க அல்லது ஆவணகளுக்கான அணுகலை அகற்றுமாறு கோருதல்

இந்த நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு சட்டங்களையும் கொள்கைகளையும் பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு தேவைப்பட்டால் மேலதிகத் தகவல்களுக்கு உங்கள் நிறுவனத்திடம் கோருங்கள்.

## ஆதாரங்களை மதிப்பிடுதல்

### நிகழ்தகவுகளின் சமநிலை - வலுவான ஆதாரங்கள்

புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரத்தை நிறுவுவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்களும் வலுவான ஆதாரங்களும் இருத்தல் 'நிகழ்தகவுகளின் சமநிலை' என்று அழைக்கப்படுகிறது. குற்றவியல் வழக்குகளுக்குத் தேவைப்படும் அளவை விட இது சற்று பாரதூரம் குறைந்த நிலையாகும். இதில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படல் வேண்டும். எனவே, ஒரு விசாரணையை நடத்தும்போது, புகாரளிக்கத்தக்க நடத்தை நிகழ்ந்ததை **விட இது சாத்தியமா** என்று புலனாய்வாளர்கள் ஊகிக்கிறார்கள்.

## இறுதிக் கட்ட விசாரணை

### நீங்கள் பதிலளிக்கவுள்ள சந்தர்ப்பங்கள்

ஏதேனும் பாதகமான கண்டுபிடிப்புகள் செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு, குற்றச்சாட்டு குறித்து கருத்து தெரிவிக்கவும் பதிலளிக்கவும் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதை அமைப்பு உறுதி செய்தல் வேண்டும். விசாரணை முடிவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட பதிலை கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

### ஆணையகத்திற்கான அறிவிப்புகள்

உங்கள் பதிலைக் கருத்தில் கொண்ட பிறகு, நிறுவனம் தனது விசாரணை முடிவுகளை (மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள்) தயார் செய்யும். இவை ஆணையகத்திற்கு வழங்கப்படுகின்றன.

விளைவு பற்றி, குறிப்பாக அந்த விளைவு சாதகமற்றதாக இருந்தால்,

அது குறித்து உங்களுக்கு அறிவுறுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், முழு விரிவான விசாரணையின் முடிவுகள், அறிக்கைகள் மற்றும் அது குறித்த காரணங்களை நீங்கள் எப்போதும் பெற இயலாமல் இருக்கலாம். அதற்கு காரணம், குழந்தைகளைப் பற்றிய முக்கியமான தகவல்கள் அல்லது தனிப்பட்ட தகவல்கள் இதில் அடங்கலாம் என்பதாகும்.

### சாத்தியமான கண்டுபிடிப்புகளும் அதற்கான நடவடிக்கைகளும்

விசாரணையின் முடிவில் பல்வேறு சாத்தியமான கண்டுபிடிப்புகள் இடம்பெறலாம். ஆணையத்தின் தகவல் தாள் 8 ஐப் பார்க்கவும் – விசாரணையின் கண்டுபிடிப்புகள் ஐ இது குறித்த விரிவான தகவலுக்கு பார்க்கவும்.

சுருக்கமாகக் கூறினால், இவ்வாறான சந்தர்ப்பங்களில்:

- புகாரளிக்கத்தக்க நடத்தை நிகழ்ந்ததை விட இது அதிகமாக இருந்ததாக சான்றுகள் தெரிவிக்கின்றன, பின்னர் ஒரு **ஆதாரமாக கருதக்கூடிய** கண்டுபிடிப்பு செய்யப்படலாம்
- புகாரளிக்கத்தக்க நடத்தை நிகழ்ந்ததை விட இது சாத்தியமானது என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லையென்றால், விளைவாக **ஆதாரமற்ற - போதுமான ஆதாரங்கள் அற்ற** கண்டுபிடிப்பு எனக் கருதப்படலாம்
- புகாரளிக்கத்தக்க நடத்தை நடந்ததா இல்லையா என்பதை உறுதிசெய்ய போதுமான ஆதாரங்கள் இல்லையென்றால், விளைவாக **ஆதாரமற்றது - வலு சேர்க்கும் ஆதாரங்கள் இல்லாத** கண்டுபிடிப்பு எனக்கருதப்படலாம்
- புகாரளிக்கத்தக்க நடத்தை இடம்பெறவில்லை என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருந்தால், விளைவாக **போதிய ஆதாரங்கள் கிடைக்காத** கண்டுபிடிப்பு எனக்கருதப்படலாம்.
- நடத்தை இடம்பெற்றிருந்தாலும், மேலே பட்டியலிடப்பட்ட எந்தவொரு புகாரளிக்கத்தக்க நடத்தைக்கும் இது பொருந்தவில்லை என்றால், **வரையறைக்கு வெளியேயுள்ள ஒரு கண்டுபிடிப்பு நடத்தை** எனக்குருதப்படலாம்.

இந்தக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நிறுவனங்கள் பலவிதமான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும்.

### கண்டுபிடிப்புடன் மற்றும் செயலுடன் உடன்படாமை

ஒரு கண்டுபிடிப்பிற்கு பதிலளிக்கும் விதமாக நிறுவனத்தால் எடுக்கப்பட்ட ஊர்சிதத்துக்கு அல்லது நடவடிக்கைக்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், உங்கள் நிறுவனத்தின் உள்ளக முரண்பாடுகள் தீர்க்கும் நடைமுறைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

இதிலிருந்து ஆலோசனை, ஆதரவு அல்லது வழிகாட்டுதலைப் பெறவும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்:

- 1300 486 466 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் உங்கள் தொழிற்சங்கம் அவுஸ்திரேலிய தொழிற்சங்கங்களை அல்லது (03) 9659 3511 என்ற எண்ணில்

அழைப்பதன் மூலம் [விக்டோரியன் வியாபார கூட்டுச்சபையை]

- பின்வருவன மூலம் வழக்கறிஞர்:
  - [விக்டோரியாவின் சட்ட நிறுவனம்], உங்களை ஒரு வழக்கறிஞரிடம் பரிந்துரைக்க முடியும்
  - [ஜொப்வாட்ச் வேலைவாய்ப்பு உரிமைகள் சட்ட மையம்] 1800 331 617 ஊடாக (விக்டோரியா மானிலம்) அல்லது (03) 9662 1933 (மெல்போர்ன் மெட்ரோ) ஊடாக, தொழிலாளர்களுக்கு இலவச மற்றும் இரகசிய தொலைபேசி தகவல் மற்றும் பரிந்துரைகள் சேவை வழங்கப்படும்
  - [சமூக சட்ட மையங்களின் கூட்டமைப்பு], உங்களுக்கு அருகிலுள்ள ஒரு சமூக சட்ட மையத்தைக் கண்டுபிடிக்க உதவும்
- [Fair Work Ombudsman,] உங்கள் பணியிட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய தகவல்களையும் ஆலோசனையையும் வழங்கும்
- [Fair Work ஆணையகம்]ஆல், தொழிலிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு உதவிகளை வழங்க முடியும். நியாயமற்ற பணிநீக்கம், பொது பாதுகாப்பு தள்ளுபடி அல்லது சட்டவிரோத நீக்கமொன்றின் அமுலாக்கம் ஆகியவையும் இதன்போது கருத்திற்கொள்ளப்படும்.

**குழந்தைகள் குறித்த ஆய்வு மற்றும் விக்டோரியன் கற்பித்தல் பரிந்துரைகள் நிறுவனத்துடன் பணிபுரிதல்**

உங்கள் நிறுவனம் எடுக்கக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, புகாரளிக்கத்தக்க நடத்தையொன்றுடன் நீங்கள் தொடர்புப்பட்டிருந்தால், ஆணையகமானது சில சந்தர்ப்பங்களில் குழந்தைகள் ஆய்வு மையத்துடன் குறிப்பிட்ட நடத்தைக் குறித்த மீள்பரிசீலனைக்காக ஆராய்வதுடன், குழந்தைகள் ஆய்வு விக்டோரியாவுடன் மேலும் நீங்கள் பணியைத் தொடர்வதுக் குறித்து கலந்தாலோசிக்கும். குழந்தைகள் ஆய்வு நிறுவன அட்டையை நீங்கள் வைத்திருக்காவிட்டாலும் பரிந்துரைகள் கருத்திற்கொள்ளப்படலாம். நீங்கள் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆசிரியராக இருந்தால், புகாரளிக்கத்தக்க அனைத்து நடத்தை குற்றச்சாட்டுகளின் கண்டுபிடிப்புகள் குறித்து VIT க்கு அறிவிக்கப்படும்.

⚠ பதிவுசெய்யப்பட்ட ஆசிரியரைப் பற்றி புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டைப் பெறும்போது ஆணையகம் VIT க்கு ஆலோசனை வழங்க கோரப்படும்..

## தொழிலாளர்கள் அல்லது தன்னார்வலர்களின் அறிக்கைகள்

ஒரு நிறுவனத்தில் எவராவது புகாரளிக்கத்தக்க நடத்தையில் அல்லது தவறான நடத்தையில் ஈடுபட்டிருந்தார் என்ற நியாயமான நம்பிக்கை உங்களுக்கு உருவாகினால், அது புகாரளிக்கத்தக்க நடத்தையாக

இருந்தால், உங்கள் அமைப்பின் தலைவருக்கு அல்லது ஆணையகத்திற்கு நீங்கள் அறிவிக்கலாம். ஆணைக்குழுவிற்கு புகாரளிப்பது உங்கள் தற்போதைய அறிக்கையிடல் கடமைகளின் நிலைமைக்கு எந்தவித மாற்றத்தையும் செய்யாது.

எடுத்துக்காட்டாக, நீங்கள் பின்வருவனற்றை செய்யவும் நேரிடலாம்:

- உடல் ரீதியான வன்முறை அல்லது பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து ஒரு குழந்தைக்கு பாதுகாப்பு தேவை என்றவொரு நியாயமான நம்பிக்கையை உங்களுக்கு இருந்தால், குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனத்துக்குப் புகாரளிப்பது.
- குற்றவியல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தால் விக்டோரியா காவல்துறைக்கு புகார் செய்வது
- குறிப்பாக உங்களிடம் அதிகாரம் இருந்தால், பாலியல் துஷ்பிரயோகத்தின் அபாயங்களை நீக்க அல்லது குறைக்க அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுப்பது.

**குறிப்பு:** ஆணையகத்தின் மீது நல்லெண்ணத்துடன் புகாரளிக்கத்தக்க குற்றச்சாட்டைத் தெரிவிக்கிற எந்தவொரு நபருக்கும் இந்த திட்டம் சில சட்டப் பாதுகாப்புகளை வழங்குகிறது.

## மேலதிகத் தகவல்

### குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஆணையகம்

இந்தத் திட்டத்தைப் பற்றிய மேலதிகத் தகவலுக்காக, குழந்தைகள் பாதுகாப்புத் தரநிலை நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள அல்லது அறிவிப்பு செய்ய நீங்கள் இணையத்தளம், மின்னஞ்சல் அல்லது தொலைபேசியை அணுகலாம். தகவல்கள் பின்வருமாறு:

இணையத்தளம்: ccyp.vic.gov.au

மின்னஞ்சல்: contact@ccyp.vic.gov.au

தொ.பே.: (03) 8601 5281

உங்களுக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை 13 14 50 என்ற எண்ணில் அழைக்கவும். குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஆணையகத்தை (03) 8601 5281 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கூறுங்கள்.